*கவனிக்க.- 2016.01.14 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1951 - 2016 ජනවාරි මස 22 වැනි සිකුරාදා - 2016.01.22

*1951 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 516 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 519 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2016, பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2016, சனவரி மாதம் 29 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,

கொழும்பு 8,

2016 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# மாகாண சபை அறிவித்தல்கள்

## தென் மாகாண மாகாண சபை

### அம்பாந்தோட்டை மாநகர சபை

மயானபூமி, நல்லடக்கம் தொடர்பிலான கட்டளைச் சட்டம்

*(231 ஆம் அத்தியாயமான) அம்பாந்தோட்டை மாநகர சபை அதிகார எல்லைக்குரித்தான மயானபூமி, நல்லடக்கம் தொடர்பிலான கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொறுப்பு வாய்ந்த அதிகாரியான அம்பாந்தோட்டை மாநகர சபையின் சிபாரிசின்படி, 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (வகிபாக விதிமுறை) சட்டத்தின் 2 ஆம் கட்டளையுடன் முன்மொழியப்படுகின்ற மேற்குறிப்பிடப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ், தென் மாகாண முதலமைச்சரும், நீதி சமாதானம், சுகாதார, தேசிய வைத்திய, உள்ளூராட்சி நிருவாக, போக்குவரத்து உல்லாசத்துறை அமைச்சராகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், இங்கு கீழ் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி இறந்தவர்களை நல்லடக்கம் செய்வதற்கு அல்லது தகனக்கிரியை செய்வதற்கு ஒதுக்கப்பட்டுள்ள பொது மயானபூமியாக பயன்படுத்தப்படவுள்ளதாக இத்தால் கட்டளை பிறப்பிக்கின்றேன்.*

சான் விஜயலால் த சில்வா,
தென் மாகாண முதலமைச்சரும் நிதி, திட்டமிடல்,
நீதி சமாதானம், சுகாதார, தேசிய வைத்திய, உள்ளூராட்சி
நிருவாக, போக்குவரத்து, உல்லாசத்துறை, பொறியியலாளர்,
சேவை அமைச்சர்.

தக்ஷினபாய, லபுதுவ,
*2015, திசெம்பர் 21.*

#### அட்டவணை

*1. (அ) கல்வல பாதை மயானபூமி :- அதிகாரமளிக்கப்பட்டுள்ள நிலஅளவையாளர் திரு. டபிள்யூ. டீ. டீ. சுகதபால மூலம் தயாரிக்கப்பட்ட 2002.04.30 ஆந் திகதியின் 148 ஆம் இலக்க கிடைப்படத்தில் விபரிக்கப்பட்டுள்ள தென் மாகாணத்தின் அம்பாந்தோட்டை மாவட்டத்தில், மாகம்பத்துவயில் அம்பாந்தோட்டை மாநகர சபை அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள கல்வல கிராமத்தில் பெத்தவல என்னும் காணியில் 1 ஆம் இலக்க 1ஏக்கர், 1 றூட், 5.02 பேர்ச்சஸ் (0.533 ஹெக்டயார்) பரப்பளவுள்ள காணித்துண்டிற்கான எல்லைகள் :*

வடக்கு : அம்பாந்தோட்டை - திஸ்ஸ பிரதான பாதை ;
கிழக்கு : பெத்தவல நகர சபை வீட்டுத்தோட்டம் ;
தெற்கு : அருவி பாதுகாப்பரண் ;
மேற்கு : பெத்தவல நகர சபை வீட்டுத்தோட்டம்.

*1-634*

---

## கிழக்கு மாகாண மாகாண சபை

*2015 ஆம் ஆண்டிற்கான 3 ஆம் இலக்க கிழக்கு மாகாண ஒதுக்கீட்டு நியதிச் சட்டம் (குறைநிரப்பு ஏற்பாடுகள்) 2015, மார்கழி மாதம் 21 ஆந் திகதி சபையில் நிறைவேற்றப்பட்டது என்பதனையும் இதற்கான கௌரவ ஆளுநரின் ஒப்புதல் 2015, மார்கழி மாதம் 29 ஆந் திகதி பெறப்பட்டது என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.*

எம். சி. எம். செரிப்(f),
*மாகாண சபைச் செயலாளர்,*
*கிழக்கு மாகாண மாகாண சபை.*

*மாகாண சபை அலுவலகம்,*
*கிழக்கு மாகாண மாகாண சபை,*
*திருகோணமலை,*
*2015, திசெம்பர் 30.*

*1 - 801*

## கிழக்கு மாகாண மாகாண சபை

*2015 ஆம் ஆண்டிற்கான 4 ஆம் இலக்க கிழக்கு மாகாண ஒதுக்கீட்டு நியதிச் சட்டம் 2015, மார்கழி மாதம் 23 ஆந் திகதி சபையில் நிறைவேற்றப்பட்டது என்பதனையும் இதற்கான கௌரவ ஆளுநரின் ஒப்புதல் 2015, மார்கழி மாதம் 29 ஆந் திகதி பெறப்பட்டது என்பதையும் இத்தால் அறியத்தருகின்றேன்.*

எம். சி. எம். செரிப்(f),
*மாகாண சபைச் செயலாளர்,*
*கிழக்கு மாகாண மாகாண சபை.*

*மாகாண சபை அலுவலகம்,*
*கிழக்கு மாகாண மாகாண சபை,*
*திருகோணமலை,*
*2015, திசெம்பர் 30.*

*1 - 802*

---

## தென் மாகாண மாகாண சபை

*1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க திருத்தச் சட்டத்தின் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க திருத்தச் சட்டம் மற்றும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க திருத்தச் சட்டம் என்பவற்றினால் திருத்தப்பட்டவாறான பிரிவு 50 மற்றும் 57 (2) மற்றும் பிரிவு 2 (3) இன் பிரகாரம் மாகாண சபை கூட்டுறவு சங்கத்தின் சட்டத்திற்கமைவானது.*

தென் மாகாண கூட்டுறவு வளர்ச்சி மற்றும் தென் மாகாண ஆணையாளர், சேனா கொரலயகே விமல் சிசிர குமார ஆகிய என்னால் *தற்காலிகமாக செயற்பட்ட கீழ்க்குறிப்பிட்டுள்ள கூட்டுறவு சங்கங்கள், 1972 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க 5 ஆவது பிரிவு 50 மற்றும் 57 (2) இன்படி இரத்துச் செய்யப்பட்டது.*

எஸ். கே. டபிள்யூ. எஸ். குமார,
ஆணையாளர்,
கூட்டுறவு அபிவிருத்தி பதிவாளர் நாயகம்,
தென் மாகாணம்.

தென் மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,
147/3, பெட்டிகலவத்த,
காலி,
2015, ஒற்றோபர் 07.

### அட்டவணை

### அம்பாந்தோட்டை மாவட்டம்

| தொடர் இலக்கம் | பதிவு இல. | சங்கத்தின் பெயர் | மூடப்பட்ட திகதி | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 1 | ஹ/த/18 | தங்காலை தெங்கு அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் | 2004.08.04 | அம்பாந்தோட்டை |
| 2 | ஹ/328 | கனுமுல்தெனிய பீடி உற்பத்தி கூட்டுறவு சங்கம் | 2004.07.31 | அம்பாந்தோட்டை |
| 3 | ஹ/சூரி/12 | சூரியவெவ குடிசை கைத்தொழில் கூட்டுறவு சங்கம் | 2004.04.30 | அம்பாந்தோட்டை |

| தொடர் இலக்கம் | பதிவு இல. | சங்கத்தின் பெயர் | மூடப்பட்ட திகதி | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 4 | ஹ/சூரி/03 | மீகாஹாஜந்துர தோற்பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கம் | 2003.02.28 | அம்பாந்தோட்டை |
| 5 | ஹ/535 | தங்காலை பிரதேச செயலாளர் பிரிவின் மேலதிக உற்பத்தி கூட்டுறவுச்சங்கம் | 2004.12.15 | அம்பாந்தோட்டை |
| 6 | ஹ/555 | வீரகெடிய பிரதேச செயலாளர் பிரிவின் தோற்பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவுச்சங்கம் | 2005.07.31 | அம்பாந்தோட்டை |
| 7 | ஹ/287 | தங்காலை மீன்பிடி கூட்டுறவுச்சங்கம் | 2005.08.20 | அம்பாந்தோட்டை |
| 8 | ஹ/550 | கொடவுடகந்த சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்கம் | 2015.10.07 | அம்பாந்தோட்டை |

**காலி மாவட்டம்**

| தொடர் இலக்கம் | பதிவு இல. | சங்கத்தின் பெயர் | மூடப்பட்ட திகதி | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 1 | கா/1955 | காலி அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2004.06.30 | காலி |
| 2 | கா/1766 | காலி மாவட்ட ஆயுர்வேத மருந்து உற்பத்தி மற்றும் விநியோகித்தல் கூட்டுறவுச் சங்கம் | 2015.03.31 | காலி |
| 3 | கா/2415 | தென்மாகாண ஜனசவிய மேலதிக விற்பனை மற்றும் உற்பத்தி அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் | 2015.03.31 | காலி |
| 4 | கா/1586 | மாகல வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் | 2009.11.03 | காலி |
| 5 | கா/1098 | கொஸ்கொட விவசாய பயிர்கள் உற்பத்தி மற்றும் அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் | 2010.07.23 | காலி |
| 6 | கா/2361 | அம்பலங்கொடை பிரதேச செயலாளர் பிரிவின் மேலதிக உற்பத்தி அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் | 2009.11.03 | காலி |
| 7 | கா/1759 | ரிச்மன்ட் கல்லூரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் | 2011.01.31 | காலி |
| 8 | கா/1790 | காலி மாவட்ட களஞ்சிய கூட்டுறவுச்சங்கம் | 2011.01.31 | காலி |
| 9 | கா/1067 | அம்பலங்கொடை பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் | 2010.05.21 | காலி |
| 10 | கா/2410 | பென்தொட்ட நாட்டுப்புற கலை மையத்தின் மேலதிக கலைஞர் கூட்டுறவுச்சங்கம் | 2010.07.27 | காலி |
| 11 | கா/2369 | தென்னக பயணிகள் போக்குவரத்து கூட்டுறவுச்சங்கம் | 2012.09.11 | காலி |
| 12 | கா/1949 | அக்மீமன பிரதேச அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் | 2015.10.07 | காலி |
| 13 | கா/1980 | குருப்பனவ சிறு தேயிலைத் தோட்ட வாடிக்கையாளர் கூட்டுறவுச்சங்கம் | 2015.10.07 | காலி |

**மாத்தறை மாவட்டம்**

| தொடர் இலக்கம் | பதிவு இல. | சங்கத்தின் பெயர் | மூடப்பட்ட திகதி | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 1 | மா/மாலி/பிரலே/சமு/07 | ஹொரககல சிறு இறப்பர் வாடிக்கையாளர் மற்றும் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் | 2005.02.05 | மாத்தறை |
| 2 | மா/753 | பஸ்கொட பிரதேச செயலாளர் பிரிவின் மேலதிக ஊழியர் கூட்டுறவு சங்கம் | 2005.08.12 | மாத்தறை |
| 3 | மா/611 | வெலிகம பழைய கடை சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கம் | 2010.01.28 | மாத்தறை |
| 4 | மா/568 | ஜனவிகும்கம சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்கம் | 2010.01.21 | மாத்தறை |
| 5 | மா/சமு/1011 | தெவிநுவர இயந்திரத்தொகுதி மீன்பிடி கூட்டுறவுச்சங்கம் | 2012.11.29 | மாத்தறை |

1-877

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வடமேல் மாகாண அரசாங்க சேவையில், இலங்கை தொழில்நுட்ப சேவையில், விவசாய ஆலோசகர் II "ஆ" பிரிவிற்கு (III தரத்திற்கு) மிருக அபிவிருத்தி ஆலோசகர் III ஆம் தரத்திற்கு அலுவலர்களை சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2015

வடமேல் மாகாண அரசாங்க சேவையில் இலங்கை தொழில்நுட்ப சேவையில் விவசாய ஆலோசகர் II "ஆ" பிரிவில் (III தரம்) மிருக அபிவிருத்தி ஆலோசகர் III ஆம் தரம் ஆகிய பதவிகளில் வெற்றிடங்களை நிரப்புவதற்காக வடமேல் மாகாணத்தினுள் நிரந்தரமாக வசிக்கும், தகுதியுடைய ஆண்/பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**1. பொது தகைமைகள்:**

1.1 விண்ணப்பதாரிகள் இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

1.2 வடமேல் மாகாண அதிகாரப் பிரிவினுள் விண்ணப்பப் படிவம் கோரப்படும் கடைசித் திகதிக்கு 3 வருட காலம் தொடர்ந்து நிரந்தரமாக குடியிருப்பது பற்றி உறுதிப்படுத்தல் வேண்டும்.

1.3 விண்ணப்பப் படிவம் கோரப்படும் கடைசித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (தற்போது வடமேல் மாகாண சபை அரச சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலர்களுக்கு இவ்வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது)

1.4 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் சிறந்த உடல், உள நலமுடையவராகவும் நல்லொழுக்கமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

**2. கல்வித் தகைமை மற்றும் தொழில்நுட்ப தகைமைகள் :**

| பதவிப் பெயர் | பதவிக்காக க. பொ. த. (சா.தர) தகைமைகள் | ஒவ்வொரு பதவிக்காகவும் க. பொ. த. (உ. தர) தகைமைகள் | தொழில்நுட்ப தகைமை |
|---|---|---|---|
| விவசாய ஆலோசகர் (சிவில்) II "ஆ" வகுப்பு (III தரம்) | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் மொழி மற்றும் சரித்திரம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் (அதாவது 4 திறமை சித்தியுடன்) இரு அமர்வுகளுக்கு | க. பொ. த. (உ.தர) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) பௌதீக வியல், இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல், ஆகிய பாடங்களில் (2) இரண்டு பாடங்களுடன் விஞ்ஞானப் பாடங்கள் மூன்று (3) இல் ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல் அல்லது | (i) குண்டசாலை, அங்குணகொலபெலெஸ்ச, பெல்வெஹெர, லபுதுவ, வாரியபொல, பிபில, அநுராதபுர, கரபிங்ச மற்றும் வவுனியா ஆகிய விவசாய கல்லூரிகளினால் வழங்கப் படுகின்ற இரண்டு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ். அல்லது<br>(ii) அக்குவைனாஸ் கல்லூரியினால் வழங்கப்படுகின்ற இரண்டு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்; |

| பதவிப் பெயர் | பதவிக்காக க. பொ. த. (சா.தர) தகைமைகள் | ஒவ்வொரு பதவிக்காகவும் க. பொ. த. (உ. தர) தகைமைகள் | தொழில்நுட்ப தகைமை |
|---|---|---|---|
| | மேற்படாதவாறு 6 பாடங்களில் (5 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும்) | விவசாயவியல், உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்கள் (2) உடன் விஞ்ஞான பாடங்கள் (3) இல் க. பொ. த. (உ.தர) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல் (புதிய பாடத்திட்டம்) | அல்லது<br>(iii) அம்பாறை ஹாடி தொழில்நுட்ப கல்லூரியினால் விவசாயம் பற்றிய இரண்டு வருட விவசாய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் ;<br>அல்லது<br>(iv) இலங்கை தொழில்நுட்ப சேவை குழு அல்லது வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற மேற்கூறப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு சமமான அல்லது உயர் தகைமை பெற்றிருத்தல் வேண்டும். |
| மிருக அபிவிருத்தி ஆலோசகர் III தரம் | க. பொ. த. (சா. த.) பரீட்சையில் மொழி மற்றும் சரித்திரம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் (அதாவது 4 திறமை சித்தியுடன்) இரு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு 6 பாடங்களில் (5 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல் வேண்டும்) | க. பொ. த. (உ.தர) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) பௌதீகவியல், இரசாயனவியல், விலங்கியல், தாவரவியல், ஆகிய பாடங்களில் (2) இரண்டு பாடங்களுடன் விஞ்ஞானப் பாடங்கள் மூன்று (3) இல் ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல் அல்லது விவசாயவியல், உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்கள் (2) உடன் விஞ்ஞானப் பாடங்கள் (3) இல் க. பொ. த. (உ.தர) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தி யடைந்திருத்தல் (புதிய பாடத்திட்டம்) | (i) அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மிருக கட்டுப்பாடு கல்லூரி யினால் வழங்கப்படுகின்ற மிருக உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட மிருக கட்டுப்பாடு பற்றிய தேசிய டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல்;<br>அல்லது<br>(ii) அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வழங்கப்பட்ட மிருக கட்டுப் பாடு பாடசான்றிதழுடன் விவசாய டிப்ளோமா பெற்றிருந்தால் (முன்னுரிமை வழங்கப்படுவது மிருக கட்டுப்பாடு டிப்ளோமா விற்காகும்.<br>தகைமையற்றவர்கள் இருந்தால் மாத்திரம் இச்சான்றிதழ் பற்றி கவனத்தில் கொள்ளப்படும்) |

**க.கொ.**- மேற்கூறப்பட்ட எல்லா கல்வி மற்றும் ஏனைய தகைமை 2016.02.23 ஆந் திகதிக்கு பூர்த்திசெய்யப்பட்ட சான்றிதழ் பெற்றிருத்தல் வேண்டும்.

**3. சம்பளத் திட்டம்.-**

3.1 **விவசாய ஆலோசகர்/மிருக அபிவிருத்தி ஆலோசகர் III ஆந் தரம்**
ரூபா 15,005-180×4-240×6-320×11-360×20-ரூபா 27,885 ஆகும்.
(அரச நிருவாக சுற்றுநிருபம் 6/2006 (IV) இல் MN3-2006A சம்பளத்திட்டம்)

**4. சேவை உடன்படிக்கை:**

4.1 தொழில்நுட்ப சேவை II வகுப்பில் “ஆ” பிரிவில் (III தரம்) பதவி நிரந்தரமானது, ஓய்வூதியம் உரித்து உடையது, விதவைகள், அநாதைகள்/விதவைகள் தபுதாரர் ஓய்வூதிய திட்டத்திற்கு பங்களிப்பு செய்தல் வேண்டும்;

4.2 இப்பதவிக்கு நியமிக்கப்படுகின்றவர்கள் உரியவாறு 3 வருடகாலம் நன்னடத்தை காலத்திற்கு உள்ளாதல் வேண்டும்;

4.3 தற்போது வடமேல் மாகாண அரச சேவையில் நிரந்தர அலுவலராயின் விண்ணப்பப் படிவம் பொறுப்பேற்கப்படும் கடைசி திகதிக்கு 5 வருட காலத்தினுள் உரிய சம்பள உயர்வுகளை பெற்றிருத்தலுடன் சேவைக் காலம் மகிழ்ச்சிக்குரியதாக இருத்தல் வேண்டும்;

4.4 சேர்த்துக்கொள்ளப்படும் அலுவலர்கள் வடமேல் மாகாணத்தினுள் இடமாற்றங்களுக்கு கீழ்படிதல் வேண்டும். வடமேல் மாகாண சபை அதிகாரப் பிரிவினுள் குறிப்பிடப்படும் எப்பகுதியிலேனும் கட்டாயமாக 5 வருடம் சேவை ஆற்றுவதற்கு கட்டுப்படல் வேண்டும்.

4.5 தாபனவிதிக் கோவையில் I ஆம் பகுதியில் II ஆம் அத்தியாயத்தில் 10 தொடக்கம் 12 வரையிலான ஏற்பாடுகள் பதவிக்கு பொருந்தும் இன்னும் இப்பதவிக்காக ஆட்சேர்ப்பு/தரம் உயர்வு பிரமாணக் குறிப்பின் ஒழுங்குவிதிகளுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் ஒழுங்கு விதிகளுக்கும், வடமேல் மாகாண நிதிப் பிரமாணம் மற்றும் ஒழுக்காற்று வேலைக் கோவைக்கும், திணைக்கள கட்டளைகளுக்கும், இலங்கை தொழில்நுட்ப சேவை நியதிகளுக்கும், அரச மற்றும் வடமேல் மாகாண சபையினால் வெளியிடப்பட்டுள்ளதும் காலத்திற்கு காலம் வெளியிடப்படுகின்ற வேறு நிபந்தனைகளுக்கும் கட்டளைகளுக்கும் அமைய செயற்படுவதற்கு எல்லா அலுவலர்களும் கட்டுப்படுதல் வேண்டும்.

5. **ஆட்சேர்ப்பு முறை:**

5.1 வெற்றிட எண்ணிக்கையை விட குறைந்த விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றால் தகைமைகளை பரிசீலிக்கும் நேர்முகப் பரீட்சை மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும். வெற்றிட எண்ணிக்கையினை விட அதிகமான விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றால் வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படுகின்ற பரீட்சையின் பெறுபேறுபடி ஆட்சேர்ப்பு செய்யப்படும். இப் பரீட்சை வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் குருநாகலில் நடாத்தப்படும். விண்ணப்பிக்கப்படும் மொழி பின்பு திருத்தியமைப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5.2 ஆட்சேர்ப்பு செய்யப்படும் நூற்று வீதம்.-

(அ) விவசாய ஆலோசகர்
திறந்த போட்டிப் பரீட்சையினால் 90% உம் உள்ளக போட்டிப் பரீட்சையினால் 10%.

(ஆ) மிருக அபிவிருத்தி ஆலோசகர் - எல்லா வெற்றிடங்களையும் நிரப்புதல் திறந்த போட்டிப் பரீட்சை மூலமாகும்.

5.3 பரீட்சைப் பாடத்திட்டத்தில் காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு கேள்விகளுக்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளை பெற்றுக்கொண்ட விண்ணப்பதாரிகளை தேர்ந்தெடுத்து அவர்களின் புள்ளிகளின் கூட்டுத்தொகைப்படி சேர்த்து கொள்வதற்கான முன்னுரிமை அட்டவணை ஒன்றினை ஒழுங்கமைக்கப்படும். அவ் அட்டவணையின் தொடர் இலக்கப்படி மற்றும் வெற்றிட எண்ணிக்கைப்படி தகைமைகளை பரிசீலிக்கும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

5.4 உரிய துறையில் உள்ளக போட்டிப் பரீட்சைக்காக தகைமையுடைய திணைக்கள சேவையாளர்கள் இல்லாதிருந்தால் மொத்த வெற்றிட அளவுகளையும் திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேறுபடி நிரப்பப்படுவதுடன், அது வடமேல் மாகாண சபை அரச சேவை ஆணைக்குழுவின் தீர்மானப்படி செயற்படுத்தப்படும்.

6. **பரீட்சை பாடத்திட்டம்.-**
பரீட்சை இரண்டு கேள்விப் பத்திரங்களை கொண்டது. விபரமான பரீட்சை பாடத்திட்டங்கள் இணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ளது.

| பதவி | கேள்விப் பத்திரம் | காலம் | புள்ளி |
|---|---|---|---|
| 1. விவசாய ஆலோசகர் II "ஆ" (III தரத்திற்கு) | சவால்கள் பரிசீலனை | 1 மணி | 100 |
| | தொழில்நுட்ப கேள்வி பத்திரம் | 3 மணி | 100 |
| 2. மிருக அபிவிருத்தி ஆலோசகர் | சவால்கள் பரிசீலனை | 1 மணி | 100 |
| | பொது அறிவு | 1 1/2 மணி | 100 |

**க. வே.**- ஆட்சேர்ப்பிற்காக தகைமை பெறுவது ஒவ்வொரு கேள்விப்பத்திரத்திற்காக 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்றுக் கொண்டால் மாத்திரமாகும்.

7. **பொய்யான தகவல்களுக்கான தண்டனை.**- விண்ணப்பப்படிவத்தினை நிரப்பும்போது கவனமாகவும் உண்மையான தகவல்களையும் வழங்குதல் வேண்டும். அத்தகவல்கள் எவ்விதத்திலும் திருத்தியமைப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது. இப்பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கமைய விண்ணப்பதாரி ஒருவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமையற்றவர் என்று தெரிய வந்தால் பரீட்சைக்கு முன்பு அல்லது பரீட்சையின்போது அல்லது பரீட்சையின் பின்பு அல்லது எச்சந்தர்ப்பத்திலாவது அவரின் எதிர்ப்பார்ப்பினை நிராகரிக்கமுடியும்.

விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் எச்சந்தர்ப்பத்திலாவது போலியானது என்று தெரியவந்தால் அவரை வடமேல் மாகாண அரச சேவையில் இருந்து விலக்க முடியும். விண்ணப்பதாரிக்கு பரீட்சை நுழைவுப் பத்திரம் வழங்குவது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை பெற்றுள்ளதனை உறுதிப்படுத்துவதாக அமையாது என்பதனை கவனத்தில் கொள்ளவும்.

8. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணமாக 500 ரூபா தொகையினை வடமேல் மாகாண அரச சேவை ஆணைக்குழுவின் செயலாளரின் இலக்கம் 2003-02-13 இற்கு வருமான கணக்கிற்கு வைப்புச் செய்தல் வேண்டும். வடமேல் மாகாணத்தில் குடியிருக்கும் விண்ணப்பதாரி தாம் நிரந்தரமாக வசிக்கும் பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு அத்தொகையினை செலுத்த வேண்டும். அவ்வாறு பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட வ. மா. ச. நி. 2 பற்றுச்சீட்டினை விண்ணப்பப் பத்திரத்தில் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற் படப்பிரதியினை உபயோகத்திற்காக தம் வசம் வைத்திருத்தல் உகந்தது) எக்காரணத்திற்கேனும் செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் திருப்பி செலுத்தப்படமாட்டாது என்றும், அப்பரீட்சைக் கட்டணம் வேறு எந்த பரீட்சைக்காகவும் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்படமாட்டாது என்பதனை கவனத்திற் கொள்ளவும்.

9. **விண்ணப்பிக்க வேண்டிய முறைகள்**.-

விண்ணப்பப் படிவம் A4 (21×29 செ. மீ.) அளவில் கடதாசியினை உபயோகித்து

(i) இலக்கம் 1 தொடக்கம் 4 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும்
(ii) இலக்கம் 4 தொடக்கம் ஏனைய பந்திகள் அடுத்தடுத்த பக்கங்களில் உள்ளடங்குமாறு விண்ணப்பப்படிவத்தினை ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டும்.
(iii) தற்போது அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவத்தில் 01 தொடக்கம் 12 வரை எல்லா பகுதிகளையும், மற்றைய விண்ணப்பதாரிகள் 1 தொடக்கம் 11 வரையிலான எல்லா பகுதிகளையும் பூர்த்தி செய்து விண்ணப்பப் படிவத்தினை சமர்ப்பித்தல் வேண்டும்.

அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்பத்திரத்திற்கு அமைய உள்ளதா என்பதனை விண்ணப்பதாரியினால் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மாதிரி விண்ணப்பப் பத்திரத்திற்கு அமையாத பூர்த்தியற்றதாக அனுப்பப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப் பத்திரத்தின் நிழற் படப்பிரதி ஒன்றினை விண்ணப்பதாரி தம்மிடம் வைத்தக் கொள்வது உபயோகமானது. விண்ணப்பப்பத்திரத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற அலுவலர். பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவி வகிக்கின்ற அலுவலர் ஒருவரினாலோ 240,360 ரூபாவை அல்லது அதற்கு அதிகமான தொகையினை வருடாந்த திரட்டிய சம்பளமாக அரசில் நிரந்தரப் பதவி நிலையினை வகிக்கும் அலுவலரினால் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

10. விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கின்ற பரீட்சையின் பெயரினை தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டியதுடன், ஒவ்வொரு பரீட்சைக்காகவும் வெவ்வேறு விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பித்தல் வேண்டும். அவ்வாறு சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் 2016, பெப்புருவரி 23 ஆந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு "செயலாளர், வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, மாகாண சபை அலுவலகத் தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் உள்ளடங்கிய தகவல்களின்படி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை வழங்கியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு நுழைவுப்பத்திரம் வழங்கப்படும். நுழைவுப்பத்திரம் கிடைக்காது இருந்தால் கீழ் காணப்படும் தகவல்களுடன் வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அறிவித்தல் வேண்டும்.

1. விண்ணப்பப் படிவம் மற்றும் நிதி செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்று;
2. பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டினை உறுதிப்படுத்திய நிழற்படப் பிரதி ஒன்று.

11. **அடையாளம்**.- தாம் தோறுகின்ற எல்லா பாடங்கள் சம்பந்தமாகவும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்தியடையும் வகையில் விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தில் தமது அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். இதற்காக

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு ஏற்றுக்கொள்ளப்படும்.

12. இந்த பரீட்சை நடாத்துவது அல்லது நடாத்தாதது பற்றி அல்லது நடாத்திய பின்பு தேர்ந்தெடுத்தல் வெற்றிட எண்ணிக்கை பற்றி இறுதித் தீர்மானம் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உரியதாகும். அறிவித்தலில் வழங்கப்படாத ஏதாவதொரு விடயம் இருந்தால் அதற்கான தெளிவுபடுத்தல்/தீர்மானம் எடுக்கும் உரிமை வடமேல் மகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உரியதாகும்.

வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

காந்தி வேஹெல்ல,
செயலாளர்,
வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு.

வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
மாகாண சபை அலுவலகத் தொகுதி,
குருநாகல், 037-2233769
2016, சனவரி 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வடமேல் மாகாண அரசாங்க சேவையில் இலங்கை தொழில்நுட்ப சேவையின் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016**

(விண்ணப்பிக்கும் பதவி) (அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்கு தோற்றும் மொழி (உரிய கூட்டில் ✓ இடவும்)

சிங்களம் ☐ தமிழ் ☐ ஆங்கிலம் ☐

1. பெயர் :
   1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : திரு./திருமதி/செல்வி :-----.
   (ஆங்கில பெரிய எழுத்தில்) உதா : RATHNAYAKA R. M. T.
   1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்தில்) :-----.
   1.3 முழுப்பெயர் (சிங்களத்தில் /தமிழில்) :-----.
   1.4 தேசிய ஆள் அடையாளட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

2. 2.1 நிரந்தர முகவரி :-----.
   (ஆங்கில பெரிய எழுத்தில்) :-----.
   2.2 நிரந்தர முகவரி :-----.
   (சிங்களத்தில் /தமிழில்) :-----.
   2.3 நுழைவுப்பத்திரம் அனுப்பப்பட வேண்டிய முகவரி :-----.
   2.4 தொலைபேசி இலக்கம் :-----.

3. 3.1 பால் : ஆண் /பெண் பெண் - F ☐ ஆண் - M ☐
   3.2 பிறந்த திகதி :
   ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐
   3.3 2016.02.23 ஆந் திகதிக்கு வயது :
   வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. 4.1 விண்ணப்பதாரி உரித்தாகும் நிருவாக மாவட்டம்:-----.
   4.2 பிரதேச செயலாளர் பிரிவு :-----.
   4.3 கிராம அலுவலர் பிரிவு :-----.

5. கல்வித் தகைமை :-
   5.1 க.பொ.த. (சா. தர) பரீட்சை பற்றிய விபரம் :-
   முதலாம் அமர்வு - வருடமும் மாதமும் :-----. பரீட்சை சுட்டெண் :-----.
   இரண்டாம் அமர்வு - வருடமும் மாதமும் :-----. பரீட்சை சுட்டெண் :-----.

| | பாடம் | முதலாவது அமர்வு தரம் | இரண்டாவது அமர்வு தரம் | | பாடம் | முலாவது அமர்வு தரம் | இரண்டாவது அமர்வு தரம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 6 | | | |
| 2 | | | | 7 | | | |
| 3 | | | | 8 | | | |
| 4 | | | | 9 | | | |
| 5 | | | | 10 | | | |

   5.2 க.பொ.த. (உ. தர) பரீட்சை பற்றிய விபரம் :-----.
   பரீட்சையின் - வருடம் மற்றும் மாதம் :-----.

| | பாடங்கள் | தரம் | | பாடங்கள் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 3 | | |
| 2 | | | 4 | | |

6. தொழில்நுட்ப தகைமை :-----.

| நிறுவனம் | கற்றுள்ள பாடநெறி | காலம் | தரம் | சான்றிதழின் இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

7. வேறு தகைமைகள் :-----.

8. நீங்கள் எப்போதாவது எந்தவொரு குற்றத்திற்காகவும் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகியுள்ளீரா? :-----.

ஆம் ☐ இல்லை ☐

(உரிய கூட்டினுள் குறிப்பிடவும்) (ஆம் எனின் விபரிக்கவும்)

9. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு பற்றிய விபரம் : -
 (i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பிரதேச செயலாளர் அலுவலகம்/தபால் அலுவலகம் :-----.
 (ii) பற்றுச்சீட்டு இலக்கம்/நிதி கட்டளையின் இலக்கம்/திகதி மற்றும் செலுத்திய தொகை :-----.

பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும்.

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) இவ் விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனக்கு தெரிந்தளவில் உண்மையானதும், சரியானதும் என்று கௌரவமாக தெரிவித்துக்கொள்கின்றேன். இங்கு ஏதாவதொரு பகுதி பூர்த்திசெய்யப்படாது மற்றும் பிழையாக பூர்த்திசெய்யப்பட்டதனால் ஏற்படுகின்ற நஷ்டத்தினை ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். இன்னும் இங்குள்ள எல்லா பகுதிகளும் சரியாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்துக்கொள்கின்றேன். பரீட்சையின் எல்லா நிபந்தனைகளையும் பின்பற்றுவதற்கு நான் உடன்படுகின்றேன்.

(ஆ) என்னால் வழங்கப்பட்டுள்ள இவ் அறிவித்தல் போலியானது என்று உறுதிப்படுத்தப்பட்டால் இப் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கு முன்பு தகுதியற்றவராவேன் என்பதும் மற்றும் நியமனம் கிடைத்த பின்பு தெரியவந்தால் சேவையினை முடிவுறுத்துவதற்கும் உடன்பட வேண்டும் என்பது எனக்குத் தெரியும்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்:**

இந்த விண்ணப்பப்பத்திரத்தினை சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ........................................................................................ அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதனையும், அவர் ............................. ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்பதனையும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்

திகதி :-----.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர்:-----.
பதவி :-----.
முகவரி :-----.
(பதவி முத்திரையினால் உறுதிப்படுத்துகிறேன்.)

*12.* ***திணைக்கள தலைவரின் சான்றிதழ்:***

*மேற்குறிப்பிட்ட தகவல்கள் திரு./திருமதி/செல்வி ................................................................... அவர்கள் .............................. அலுவலகத்தில் பணியாற்றுபவர் என்றும், அவரின் பணி திருப்திகரமானது என்றும், இப்பரீட்சையின் பெறுபேற்றின்படி நியமனத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் அவரை தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது என்றும் மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானது என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.*

-----,
*திணைக்களத் தலைவரின் கையொப்பம்*

*திகதி :-----.*

*உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர்:-----.*
*பதவி :-----.*
*முகவரி :-----.*
*(பதவி முத்திரையினால் உறுதிப்படுத்துகிறேன்.)*

***பின்னிணைப்பு 1 - விபரமான பாடநெறி***

*1. விவசாய ஆலோசகர் மற்றும் மிருக அபிவிருத்தி ஆலோசகர்:*

(i) *சவால் பரிசீலனை (காலம் 1 மணி. 100 புள்ளிகள்)*
*விண்ணப்பதாரிகளின் மொழித் திறன்கள், கணிதத் திறமை மற்றும் தர்க்க சக்தி அளப்பதற்காக ஒழுங்கமைக்கப்படுகின்ற குறுகிய மற்றும் பல வகையான கேள்விகளுடனானது.*

*2. மிருக அபிவிருத்தி ஆலோசகர்:*

(ii) *பொது அறிவு (காலம் 1 1/2 மணி. 100 புள்ளிகள்)*
*அரசியல், கல்வி, கலாசார, சமூக, விஞ்ஞான தொழில்நுட்பம் மற்றும் விளையாட்டு துறையில் உள்நாட்டு மற்றும் சர்வதேச அடிப்படையில் முக்கியமான தற்கால நிகழ்வுகள் பற்றி விண்ணப்பதாரிகளின் அறிவினை அளப்பதற்காக அகநிலை கேள்விப்பத்திரமாகும்.*

*3. விவசாய ஆலோசகர்:*

(iii) *தொழில்நுட்ப கேள்விப்பத்திரம் (காலம் 3 மணி. 100 புள்ளிகள்)*

*1. இலங்கையில் பொருளாதார அபிவிருத்திக்காக விவசாயத்தின் பங்களிப்பு*
- *(அ) மொத்த தேசிய உற்பத்திக்கு விவசாயத்தின் பங்களிப்பு*
- *(ஆ) வேலைவாய்ப்பு*
- *(இ) ஏற்றுமதி மற்றும் இறக்குமதியின்போது விவசாயத்திற்கு உரித்துடைய இடம்.*

*2. இலங்கையின் காலநிலை வலயம் பற்றிய அறிவு*

*3. மண் மற்றும் தாவர ஊட்டச் சத்து:*
- *(அ) மண்ணின் அமைப்பு, நுண், பௌதிக மற்றும் இரசாயன பண்புகள், பயிர் சாகுபடி மீதான விளைவுகள்.*
- *(ஆ) தாவர ஊட்டச் சத்து மண்/தாவர ஊட்டச்சத்து முகாமைத்துவம்*
- *(இ) தாவர ஊட்டச் சத்து பற்றிய விசேட பிரச்சினைகள்*

*4. நெல் உற்பத்தி:*
- *(அ) மண் மற்றும் காலநிலை தேவை*
- *(ஆ) வகைப்படுத்தல்*
- *(இ) தரை தயாரிப்பு மற்றும் நாற்று நடுகையினை நிருவகித்தல்*
- *(ஈ) பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு*
- *(உ) பசளை இடல்*
- *(ஊ) நீர் முகாமைத்துவம்/அறுவடையை மேம்படுத்துவதற்காக நவீன முறைகள்*
- *(எ) அறுவடை களையெடுத்தல் மற்றும் தொழில்நுட்ப உத்திகள்*
- *(ஏ) விதை நெல் உற்பத்தி*

*5. வேறு புலம் பயிர் உற்பத்தி*
- *(அ) பெரிய வெங்காயம், மிளகாய், உருளைக்கிழங்கு, சோளம் மற்றும் வேறு பயிர் வகைகள், மண் மற்றும் காலநிலை தேவைகள் மற்றும் நடுகை செயற்பாடு, களஞ்சியம் மற்றும் விற்பனை, அறுவடையின் பின் தொழில்நுட்பம், வர்த்தக சந்தைக்கு சமர்ப்பித்தல்.*

6. காய்கறி உற்பத்தி:
 (அ) காய்கறி நாட்டு நடுகை மேடையினை நிருவகித்தல்
 (ஆ) காய்கறி வகைகளை விளம்பரப்படுத்தல் மற்றும் நடுகை நடவடிக்கை, அறுவடை செய்தல் மற்றும் ஒழுங்கமைத்தல்.

7. பழங்கள்:
 (அ) பழங்களை விளம்பரப்படுத்தல் மற்றும் நடுகை நடவடிக்கை, அறுவடை செய்தல் மற்றும் ஒழுங்கமைத்தல்.

8. பயிர் பாதுகாப்பு:
 (அ) பயிர்களுக்கு தொற்றுகின்ற பிரதான நோய்கள் மற்றும் பூச்சிகளை அறிந்துக்கொள்ளலும் அவற்றினை கட்டுப்படுத்தும் முறையும்.
 (ஆ) களைகளை கட்டுப்படுத்தல், களைகளை கட்டுப்படுத்தும் முறையும்.
 (இ) பூச்சிக் கொள்ளி கட்டுப்பாட்டின் போது பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு முறையும்.

9. மண் இரசாயனம்.- மண் பாதுகாப்பின் முக்கியத்துவம் மற்றும் பலவகையான மண் வகைகளை பாதுகாக்கும் முறைகள்.

10. நீர்பாசன திட்டம் மற்றும் நீர் முகாமைத்துவம்:
 (அ) பலதரப்பட்ட பயிர் வகைகளுக்காக உகந்த நீர் வழங்கல் திட்டம் மற்றும் அவற்றின் நீர் முகாமைத்துவம்;
 (ஆ) நுண் நீர் வழங்கல் திட்டம்;
 (இ) நீர் ஓட்டம் மற்றும் அதன் முக்கியத்துவம்

11. பண்ணைகளை இயந்திரமயமாக்கல்:
 (அ) பண்ணைகளை இயந்திரமயமாக்குவதனால் ஏற்படுகின்ற நன்மை தீமைகள்;
 (ஆ) நிலத்தை பதப்படுத்துவதற்கு உபயோகப்படுத்தப்படும் விவசாய இயந்திர உபகரணம் ;
 (இ) நீர் வழங்கல் மற்றும் தாவர பாதுகாப்பிற்காக உபயோகப்படுத்தப்படும் விவசாய இயந்திர உபகரணங்கள்;
 (ஈ) மேற்கூறப்பட்ட இயந்திரங்களை செயற்படுத்தல் மற்றும் பராமரிப்பு.

12. தேனீக்களை நிருவகித்தல்:
 (அ) பொருளாதாரத்தின் முக்கியத்துவம்;
 (ஆ) தேனீக்களை வீடுகளில் ஆரம்பித்தல் மற்றும் கொண்டு நடாத்தல்
 (இ) அறுவடையினை பெற்றுக்கொள்ளல் மற்றும் சந்தைப்படுத்தலும்.

13. மலர்கள் மற்றும் அலங்கார செடிகள் சாகுபடி மற்றும் நிலம் அழகுப்படுத்தல்:
 (அ) பொருளாதாரத்தின் முக்கியத்துவம்;
 (ஆ) நில அழகுப்படுத்தல் ;
 (இ) சந்தைக்கு வெட்டப்பட்ட மலர்களை சந்தைக்கு விடுவித்தல் ;
 (ஈ) சந்தைக்காக அலங்கார செடிகளை உற்பத்தி செய்தல்.

14. பாதுகாப்பு பயிர் விவசாயம்:
 (அ) முக்கியத்துவம்;
 (ஆ) திட்டமிடல் ;
 (இ) பயிர்களை தேர்ந்தெடுத்தல், நீர்/பசளை இடல் ;
 (ஈ) கொண்டு நடாத்தல் மற்றும் அறுவடை செய்தல்.

15. மிருக கட்டுப்பாடு:
 (அ) கோழி வளர்ப்பு மற்றும் கால்நடை தொழிலின் முக்கியத்துவம் ;
 (ஆ) பின்தங்கிய பண்ணைகளை நிருவகித்தலின் கீழ் மேற்கூறப்பட்ட உற்பத்திகளை கொண்டு நடாத்தல்.

16. விவசாய விநியோகம்:
 (அ) விவசாய விநியோகம்;
 (ஆ) விவசாய விநியோக உத்திகள் மற்றும் முறைகள் ;
 (இ) விவசாய விநியோக தொடர்பாடல் முறை.

## ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு

ஊவா மாகாண அரசாங்க சேவையில் கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் தையல் போதனாசிரியர் - தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2016

ஊவா மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தில் நிலவும் தையல் போதனாசிரியர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடாத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சைக்கு ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவுள்ள பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016.02.15 ஆகும்.

| | | |
|---|---|---|
| ஆட்சேர்ப்பு செய்யப்படும் தரம் | : | தையல் போதனாசிரியர் - தரம் III |
| சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) | : | பொது நிர்வாக சுற்றறிக்கை இல 06/2006 (iv) இன் MN 1-2006A சம்பளகுறியீட்டு இலக்கத்தின் பிரகாரம் ரூபா 13,120 - 10×145 - 11×170 - 10×240 -10 × 320 - 20,040/- ஆகும். |

**2. ஆட்சேர்ப்புக்குரிய பொதுத் தகைமைகள் :-**

(அ) இப்பதவிக்கு பெண்கள் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்;

(ஆ) விண்ணப்பதாரர் பரம்பரையாகவோ அல்லது பதிவின் மூலமோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(இ) சகல விண்ணப்பதாரர்களும் நல்லொழுக்கமுள்ளவர்களாகவும், ஊவா மாகாணத்தின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றக்கூடியவர்களாகவும் பதவியின் கடமைகளை நிறைவேற்றக்கூடிய போதிய உடல், உள ஆரோக்கியமுள்ள வர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு ஆகக்குறைந்தது உடன் முன்னரான 3 வருடங்கள் தொடர்ச்சியாக ஊவா மாகாணத்தில் வதிவு உள்ளவராக இருத்தல் வேண்டும். பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நேர்முகப் பரீட்சையின்போது உரிய படிவத்தில் வதிவை உறுதிசெய்தல் வேண்டும்.

(உ) இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக தேவையென இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு எல்லா விதத்திலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

(ஊ) **வயது**: விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**3.கல்வித் தகைமைகள்.-**

(i) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தரப்) பரீட்சையில் சிங்களம் / தமிழ் / ஆங்கிலமொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் (6) சித்தியடைந்திருத்தல்.

அல்லது

(ii) தேசிய பொதுச் சான்றிதழ் பரீட்சையில் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் இரண்டு பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(iii) கல்விப்பொதுத் தராதர (உயர் தரப்) பரீட்சையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

மற்றும்

(iv) தையல் வேலை, மனைப்பொருளியல் மற்றும் எம்புரொய்டர் வேலை, கைப்பணி, அழகுக்கலை தொடர்பாக அரசாங்க நிறுவனமொன்றில் ஒரு வருட டிப்ளோமா பாடநெறியைப் பூர்த்திசெய்து சித்தியடைந்திருத்தல். உதாரணம் - கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் மனை முகாமைத்துவ டிப்ளோமா.

**4. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :-**

(அ) இப்பதவி நிரந்தமானது. ஓய்வூதிய உரித்துடையது.

(ஆ) நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் ஊவா மாகாணத்தின் எப்பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கு கடமைப்பட்டுள்ளனர்.

(இ) பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 07/ 2007 பிரகாரம் மற்றும் அதற்கு இடைநேர்வான சுற்றறிக்கைகளினதும் ஏற்பாடுகளுக்கு அமைவாக உரிய மட்டத்தில் அரசகரும மொழித்தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

5. **ஆட்சேர்க்கும் முறை**.- திறந்த போட்டிப் பரீட்சை மூலம் வெளிவாரி விண்ணப்பதாரர்கள் மூலம் மாத்திரம் ஆட்சேர்ப்பு செய்யப்படும். திறந்த போட்டிப் பரீட்சையில் விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளும் அதிகூடிய புள்ளிகளின் முன்னுரிமைக்கு அமைய தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். எழுத்துமூலப் பரீட்சையின் பாடவிதானம் கீழே தரப்படுகின்றது.

6. **போட்டிப் பரீட்சையின் பாடவிதானம்**:-
எழுத்துமூலப் பரீட்சை 2 வினாப்பத்திரங்களைக் கொண்டுள்ளது.

| | வினாப்பத்திரம் | பாடவிதானம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்தியெய்த தேவையான புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| 1 | உளச்சார்பு | இவ்வினாப்பத்திரம் விண்ணப்ப தாரரின் மொழியாற்றல், கணக்குத் திறன், தர்க்கரீதியில் சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வு, தொகுப்பாக்கம் மற்றும் விரைவில் தீர்மானம் எடுக்கும் திறன் என்பவற்றை அளவிடக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட வினாப்பத்திரமாகும். | ஒரு 1 மணித்தியாலம் | 100 | 40% |
| 2 | பொது அறிவு | தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான பொருளாதார, அரசியல், சமூக ரீதியான தகவல்களை உள்ளடக்கிய வினாப்பத்திரமாகும். | ஒரு 1 மணித்தியாலம் | 100 | 40% |

7. **விண்ணப்பிக்கும் முறை**:- இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய ஏ4 அளவிலான தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பத்தின் அந்தந்த தலைப்புக்களை தெளிவாக தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும். 1 தொடக்கம் 4 வரையிலான தகவல்களை முதல் பக்கத்திலும் அதன்பின்னர் வரும் தகவல்களை அடுத்துவரும் பக்கங்களிலும் அமையுமாறு விண்ணப்பப்படிவத்தை தானே தயாரித்துக்கொள்ளல் வேண்டும். அந்தந்த தலைப்புக்களில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழியிலேயே விண்ணப்பத்தை பூரணப்படுத்தல் வேண்டும். தமிழ் மொழியில் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களின் தலைப்புக்கள் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கில மொழியிலும் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2016.02.15 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கப்பெறுமாறு "செயலாளர்" ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, இல 14/4, பீலிபொத்தகம வீதி, பிங்அராவை, பதுளை." எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பவும். விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "ஊவா மாகாண அரசாங்க சேவையில் கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் தையல் போதனாசிரியர் - தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2016" என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

8. **கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**:- விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/பிரசித்த நொத்தாரிசு/முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் /பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் ஒரு அதிகாரி/ அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் 230,700 ரூபா அல்லது அதற்கு கூடிய வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

9. **பரீட்சை மற்றும் நிர்வாக செலவுகள்**.- பரீட்சைக் கட்டணம் மற்றும் நிர்வாக செலவு 400 ரூபா ஆகும். இந்த தொகையை ஊவா மாகாண பிரதம செயலாளரின் வருமானத் தலைப்பு 20.03.02.12 க்கு வரவு வைத்து ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பணமாக செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் ஒட்டி அனுப்புதல் வேண்டும். பற்றுச்சீட்டின் முதல் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்புதல் கட்டாயமானதாகும். எதிர்கால தேவைக்கு பற்றுச் சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தங்கள் வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும். ஊவா மாகாணத்திலுள்ள எந்தவொரு பிரதேச செயலகங்களிலும் பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை தவிர வேறு நிறுவனங்களுக்கு பணம் செலுத்தப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுக்களோ அல்லது காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எத்தகைய காரணத்தைக்கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதையும் கவனத்திற்கொள்க.

10. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரம் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளனர் என்ற முன் முடிவின் பிரகாரம் உரிய முறையில் விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு அவ்விண்ணப்பதாரர்களது சான்றிதழ்களைப் பரீட்சித்துப் பார்க்காமல் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் ஏற்புடைய பதவிக்கு தகுதிபெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது. நேர்முகப் பரீட்சையின் போது தேவையான தகைமைகளை பெற்றிருக்காதது தெரியவருமிடத்து அவர் நியமனம் வழங்குவதற்கு தகுதியற்றவராக கருதப்படுவார்.

11. திறந்த போட்டிப் பரீட்சை ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவினாலோ அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினாலோ பதுளை நகரில் நடாத்தப்படும். போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் மாத்திரம் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் மொத்த பரீட்சைக்கும் தனது விருப்பத்திற்கமைய ஒரு மொழிமூலம் மாத்திரமே தோற்ற முடியும். விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் ஊடகமொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

12. பரீட்சை நடைபெறும் தினத்தன்று விண்ணப்பதாரியின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச் சீட்டு ஆகிய ஆவணங்களில் ஒன்றை பரீட்சை நிலைய அதிபருக்கு சமர்ப்பித்தல் வேண்டும். இந்த ஆவணங்கள் தவிர்ந்த பிற எத்தகைய ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

13. **பிழையான தகவல்கள் வழங்குதல்.-** இப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எவரேனுமொரு பரீட்சார்த்திக்கு தகைமை இல்லையென தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறுகின்ற போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலாயினும் அவரது பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுண்டு. சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னராயினும் விண்ணப்பதாரர் ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானவை என்றோ அல்லது அறிந்துகொண்டே பொய்யான தகவல்களை சமர்ப்பித்துள்ளார் என்றோ அல்லது சரியான தகவலொன்றை வேண்டுமென்றே மறைத்துள்ளார் என்றோ தெரியவருமாயின் அவரது சேவை முன் அறிவித்தல் ஏதுமின்றி முடிவுறுத்தப்படும்.

14. இந்தப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்/ஆட்சேர்ப்பு செய்யாதிருத்தல் அல்லது நிலவும் வெற்றிடங்களில் ஒரு பகுதியை நிரப்புதல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றியோ அல்லது இது பற்றிய எந்தவொரு விடயம் தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை ஊவா மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியது. அவ்வாறே இவ் அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாக தெளிவுபடுத்தும் /தீர்மானிக்கும் உரிமை ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியது.

ஆர். எம். ரீ. பீ. ஹாதியல்தெனிய
செயலாளர்,
ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு.

ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
பதுளை,
2016, சனவரி 6.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஊவா மாகாண அரசாங்க சேவையில் கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் தையல் போதனாசிரியர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2016**

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

A. தாங்கள் உள்ளடங்குகின்ற மாவட்டம்
(பதுளை - 01/மொணராகலை - 02)

B. மொழி மூலம்
(சிங்களம் - 01/தமிழ் - 02)

1. 1.1 முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் : வண./திரு./திருமதி/செல்வி :-----.
(ஆங்கில பெரிய எழுத்துக்களில்) உதா. : PERERA A. B. C.

1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில் /தமிழில்) :-----.

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில் /தமிழில்) :-----.
2.3 தொலைபேசி இலக்கம் :-----.

3. 3.1 பால் : பெண் - 1/ஆண் - 0 ☐

3.2 பிறந்த திகதி : வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 2016.02.15 ஆம் திகதியன்று வயது : வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

3.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

4. 4.1 2016.02.15 ஆந் திகதிக்கு ஊவா மாகாணத்தில் நிரந்த வதிவு :
வருடம் ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

4.2 மாவட்டத்தில் எப்போதிருந்து வசிக்கின்றீர்கள்:-----.
4.3 வசிக்கும் பிரதேச செயலகப் பிரிவு :-----.
4.4 வசிக்கும் கிராம அலுவலர் பிரிவு :-----.

5. கல்வித் தகைமைகள் :-
5.1 க.பொ.த. (சாதா/தரம்) பரீட்சை:-----.
1. வருடம் :-----. 2. சுட்டெண் :-----.

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 5 | | |
| 2 | | | 6 | | |
| 3 | | | 7 | | |
| 4 | | | 8 | | |

5.2 க.பொ.த (உயர் /தரம்) பரீட்சை
1. வருடம் :-----. 2. சுட்டெண் :-----.

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

5.3 பெற்றுக்கொண்டுள்ள தையல் டிப்ளோமா பற்றிய விபரம் :-----.

| பாடநெறியின் பெயர் | நிறுவனம் | காலப்பகுதி | செல்லுபடியாகும் திகதி | பாடங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |

6. வேறு தகைமைகள் :-----.

7. தாங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றமொன்றுக்கு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? ஆம் /இல்லை
ஆம் எனில் விபரத்தை குறிப்பிடுக :-----.

8. விண்ணப்பதாரி தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் தொழில்புரிபவராயின் தொழில் புரியும் திணைக்களத்தின் பெயரும் முகவரியும் :-----.

9. பரீட்சைக் கட்டணம் செலுத்திய விபரங்கள்: -
9.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய பிரதேச செயலகம் :-----.
9.2 பற்றுச்சீட்டு இலக்கமும் செலுத்திய திகதியும் :-----.
9.3 செலுத்திய தொகை :-----.

| |
|---|
| பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடியது.) |

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**
(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்திசெய்யப்படாமையினாலும் மற்றும் அல்லது சரியாகப் பூர்த்திசெய்யாமையினாலும் மற்றும் அல்லது பிழையாகப் பூர்த்திசெய்திருப்பதனால் ஏற்படும் நட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகிறேன். மேலும் இதில் எல்லாப் பகுதிகளையும் முழுமையாகப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.
(ஆ) என்னால் இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதென நிரூபிக்கப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:-**

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற ...................................................................................... என்ற முகவரியில் வசிக்கும் திரு./திருமதி/செல்வி .................................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் ............................. ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்
(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்)

திகதி :-----.
உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.

12. **திணைக்கள அல்லது நிறுவனத் தலைவரின் உறுதியுரை:**

(தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மட்டும்)

மேற்படி தகவல்களைக் கொண்ட திரு./திருமதி/செல்வி ................................................................................................ அமைச்சில்/ திணைக்களத்தில் /அலுவலகத்தில் ............................ ஆந் திகதி முதல் ............................. பதவியில் பணியாற்றி வருகிறார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன். அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எதிர்காலத்தில் அவ்வாறு நடவடிக்கை

எடுப்பதற்கு உத்தேசிக்கப்படவில்லை என்றும், அவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / விடுவிக்க முடியாது என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்

திணைக்களத் தலைவரின் முழுப் பெயர்:-----.
பதவி :-----.
முகவரி :-----.
(பதவி முத்திரையைப் பதிக்கவும்)
திகதி :-----.

1-839/1

---

**ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு**

ஊவா மாகாண அரசாங்க சேவையில் இலங்கை தொழில்நுட்ப சேவையில் நிலவும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பம் கோரல் - 2016

ஊவா மாகாண அரசாங்க சேவையினது இலங்கை தொழில்நுட்ப சேவையின் பின்வரும் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஊவா மாகாணத்தில் நிரந்தர வதிவுள்ள பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2016.02.15 ஆகும்.

2. **ஆட்சேர்ப்பு செய்யப்படும் தரம்.-**

1. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/எந்திரவியல்/மின்னியல்) - தரம் III மற்றும் பயிலுநர் தரம்
2. வரைவாளர் - பயிலுநர் தரம்

3. **சம்பள அளவுத்திட்டம் (மாதாந்தம்) :-**

(i) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/எந்திரவியல்/மின்னியல்) - தரம் III
இல 06/2006 (IV) மற்றும் இல.7/2008 எனும் பொது நிர்வாக சுற்றறிக்கைகளின் MN 3-2006A பிரகாரம் ரூபா 15,005- 4×180 - 6×240 - 11×320 -20 × 360 - ரூபா 27,885 மாதாந்த சம்பள அளவுத்திட்டம்.

(ii) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்/எந்திரவியல்/மின்னியல்) மற்றும் வரைவாளர் பயிலுநர் தரம்
ஆரம்ப வருடம் - 12,920 ரூபா
இரண்டாம் வருடம் - 13,040 ரூபா

4. **ஆட்சேர்ப்புக்குரிய பொதுத் தகைமைகள் :-**

(அ) விண்ணப்பதாரர் பரம்பரையாகவோ அல்லது பதிவின் மூலமோ இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்;

(ஆ) நல்லொழுக்கமுள்ளவர்களாகவும், சிறந்த உடல், உள ஆரோக்கியமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு ஆகக்குறைந்தது 3 வருடங்கள் தொடர்ச்சியாக ஊவா மாகாணத்தில் வதிவு உள்ளவராக இருத்தல் வேண்டும். பிரதேச செயலாளரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவுச் சான்றிதழ் ஒன்றின் மூலம் நேர்முகப் பரீட்சையின்போது வதிவை உறுதிசெய்தல் வேண்டும்.

(ஈ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 21 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க, மாகாண அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

5. **ஆட்சேர்ப்புக்கான கல்வி மற்றும் தொழிற் தகைமைகள்.-**

5.1 5.1.1 **தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) - பயிலுநர் தரம்**

(அ) துறைசார்ந்த இரு பாடங்கள் உள்ளடங்களாக விஞ்ஞானப் பாடங்கள் மூன்றில் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரே

அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்தோடு மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்திற்கும் திறமை சித்திகளுடன் ஆறு (6) பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

அல்லது

(ஆ) மேலுள்ள (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப கல்லூரி ஒன்றில் தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (சிவில்) மூன்று வருட பகுதிநேர பாடநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்து ஏற்புடைய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

5.1.2 **தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) - தரம் III**

5.1.1 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளுடன் பின்வரும் தொழில் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்:-

(i) மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ்;

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா;

அல்லது

(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா;

அல்லது

(iv) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா ;

அல்லது

(v) இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பொறியியல் பரீட்சையின் பகுதி I ஐ வெற்றிகரமாக நிறைவுசெய்திருத்தல்;

அல்லது

(vi) உயர்கல்வி அமைச்சுடனும் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களுடனும் உசாவி கருத்துக்களைப் பெற்ற பின்னர் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா விதத்திலும் சமமானதென இலங்கை தொழில்நுட்ப சேவைகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.

5.2 5.2.1 **தொழில்நுட்ப உத்தியோகத்தர் (எந்திரவியல்) - பயிலுநர் தரம்**

பௌதீகவியல், இரசாயனவியல் உள்ளடங்களாக விஞ்ஞானப் பாடங்கள் மூன்றில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்தோடு மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்திற்கும் திறமை சித்திகளுடன் 6 பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்;

அல்லது

(ஆ) மேலுள்ள (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப கல்லூரி ஒன்றில் தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (எந்திரவியல்) மூன்று வருட பகுதிநேர பாடநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்து ஏற்புடைய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

5.2.2 **தொழில்நுட்ப உத்தியோகத்தர் (எந்திரவியல்) - தரம் III**

5.2.1 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளுடன் பின்வரும் தொழில் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(i) மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ்;

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா;

அல்லது

(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா;

அல்லது

(iv) மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா விதத்திலும் சமமானதென இலங்கை தொழில்நுட்ப சேவைகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.

5.3 5.3.1 **தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) - பயிலுநர் தரம்**

பௌதீகவியல், இரசாயனவியல் உள்ளடங்களாக விஞ்ஞானப் பாடங்கள் மூன்றில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்தோடு மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்திற்கும் திறமை சித்திகளுடன் 6 பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்;

மற்றும்

(ஆ) மேற்படி 5.3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப கல்லூரி ஒன்றில் தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (மின்னியல்) மூன்று வருட பகுதிநேர பாடநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்து ஏற்புடைய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

5.3.2 **தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்) - தரம் III**

5.3.1 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளுடன் பின்வரும் தொழில் தகைமைகளில் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்:-

(i) மொரட்டுவை பல்கலைக்கழகத்தினால் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழ்;

அல்லது

(ii) தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய பொறியியல் டிப்ளோமா;

அல்லது

(iii) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா;

அல்லது

(iv) மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா விதத்திலும் சமமானதென இலங்கை தொழில்நுட்ப சேவைகள் சபையினால் ஏற்றுக்கொள்ளப்படும் வேறு தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.

5.4 **வரைவாளர் - பயிலுநர் தரம்**

(அ) துறைசார்ந்த இரு பாடங்கள் உள்ளடங்களாக விஞ்ஞானப் பாடங்கள் மூன்றில் க. பொ. த. (உ.த.) பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்தோடு மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் இன்னுமொரு பாடத்திற்கும் திறமை சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்;

அல்லது

(ஆ) மேலுள்ள (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப கல்லூரி ஒன்றில் சிவில் பொறியியல் வரைவாளர் பற்றிய ஒரு வருட முழுநேர பாடநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்து ஏற்புடைய சான்றிதழைப் பெற்றிருத்தல்.

6. **ஆட்சேர்க்கும் முறை.-**

(i) நிலவும் வெற்றிடங்களில் 70% வெளிவாரி விண்ணப்பதாரர்கள் மூலம் பூர்த்திசெய்யப்படும்.

(ii) இந்த அறிவித்தலில் உள்ள சகல தகைமைகளையும் கொண்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை, நிலவும் வெற்றிடங்களை விட அதிகமாக உள்ள போது மாத்திரம் திறந்த போட்டிப் பரீட்சையொன்று நடாத்தப்பட்டு போட்டிப் பரீட்சையில் விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளும் அதிகூடிய புள்ளிகளின் முன்னுரிமைக்கு அமைய ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

(iii) சகல தகைமைகளையும் கொண்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை, நிலவும் வெற்றிடங்களை விட குறைவாக உள்ள போது திறந்த போட்டிப் பரீட்சையொன்று நடாத்தப்படாமல் தகைமைகளை பரீட்சிக்கும் நேர்முகப் பரீட்சையின் மூலம் மாத்திரம் தகுதியுடையவர்கள் தெரிவு செய்யப்படுவர். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

(iv) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்)

மேற்படி 5.1.1 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளோடு பயிலுநர் பதவிக்கு தெரிவுசெய்யப்படும் உத்தியோகத்தர்கள் இரண்டு வருட கோட்பாட்டு ரீதியான மற்றும் செயல்முறைப் பயிற்சிக்கும், 5.1.1 (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடைய விண்ணப்பதாரிகள் ஒரு வருடகால கோட்பாட்டு ரீதியான மற்றும் செயல்முறைப் பயிற்சிக்கும் உட்படுத்தப்பட்டு நியமனம் வழங்கப்படுவர்.

தொழில்நுட்ப உத்தியோகத்தர் (எந்திரவியல்)

மேற்படி 5.2.1 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளோடு பயிலுநர் பதவிக்கு தெரிவுசெய்யப்படும் உத்தியோகத்தர்கள் இரண்டு வருட கோட்பாட்டு ரீதியான மற்றும் செயல்முறைப் பயிற்சிக்கும், 5.2.1 (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள

*தகைமையுடைய விண்ணப்பதாரிகள் ஒரு வருடகால கோட்பாட்டு ரீதியான மற்றும் செயல்முறைப் பயிற்சிக்கும் உட்படுத்தப்பட்டு நியமனம் வழங்கப்படுவர்.*

*தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்)*

*மேற்படி 5.3.1 (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடைய விண்ணப்பதாரிகள் ஒரு வருடகால கோட்பாடு ரீதியான மற்றும் செயல்முறைப் பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டு நியமனம் வழங்கப்படுவர்.*

*வரைவாளர் (பயிலுநர் தர பதவி)*

*மேற்படி 5.4 (அ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளோடு பயிலுநர் பதவிக்கு தெரிவுசெய்யப்படும் உத்தியோகத்தர்கள் இரண்டு வருட கோட்பாட்டு ரீதியான மற்றும் செயல்முறைப் பயிற்சிக்கும், 5.4 (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடைய விண்ணப்பதாரிகள் ஒரு வருடகால கோட்பாட்டு ரீதியான மற்றும் செயல்முறைப் பயிற்சிக்கும் உட்படுத்தப்பட்டு நியமனம் வழங்கப்படுவர்.*

(v) *மேற்படி ஒவ்வொரு பதவிகளுக்கும் பயிலுநர் தரத்தில் ஆட்சேர்க்கப்படும் விண்ணப்பதாரிகள் ஏற்புடைய பயிற்சிக் காலத்தின் இறுதியில் இந்த ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவினால்/பரீட்சை திணைக்களத்தினால் தரம் III பதவிக்கு நியமிப்பதற்காக நடாத்தப்படும் தகைமைப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். அந்த தகைமைப் பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் தரம் III பதவியின் சம்பள அளவுத் திட்டத்தின் ஆரம்ப படிமுறையில் அமர்த்தப்படுவர்.*

(vi) *தகைமைப் பரீட்சையில் சித்தியடைவதற்கு தவறும் பயிலுநர்களுக்கு 6 மாதங்களுக்கு மேற்படாத வகையில் தனது நியமனத்தை நீடித்துக்கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். அவ்வாறு நீடிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையத் தவறும் பயிலுநர்களது நியமனம் முடிவுறுத்தப்படும்.*

**7. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :-**

(அ) *இப்பதவி நிரந்தமானது. ஓய்வூதிய உரித்துடையது. நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் ஊவா மாகாணத்தின் எப்பிரதேசத்திலும் பணியாற்றுவதற்கு கடமைப்பட்டுள்ளனர்.*

(ஆ) *அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இல. 07/2007 பிரகாரம் நியமனத் திகதியிலிருந்து ஐந்து (5) ஆண்டு காலப்பகுதிக்குள் உரிய அரச கரும மொழித்தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.*

***8. விண்ணப்பிக்கும் முறை.-*** *இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய ஏ4 அளவிலான தாளில் 1 தொடக்கம் 4 வரையிலான தகவல்களை முதல் பக்கத்திலும் 5 தொடக்கம் அதன் பின்னர் வரும் தகவல்களை அடுத்துவரும் பக்கங்களிலும் அமையுமாறு இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பத்தை தயாரித்துக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பத்தின் அந்தந்த தலைப்புக்களை தெளிவாக தனது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும். விண்ணப்பதாரி பரீட்சைக்கு தோற்ற விரும்பும் மொழியிலேயே விண்ணப்பத்தை பூரணப்படுத்தல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2016.02.15 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்குமாறு "செயலாளர், ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு, இல. 14/4, பீலிபொத்தகம வீதி, பிங்அராவை, பதுளை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் மாத்திரம் அனுப்பவும். விண்ணப்பங்கள் அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையின் "ஊவா மாகாண அரசாங்க சேவையினது இலங்கை தொழில்நுட்ப சேவையின் .......... பதவிக்கு ஆட்சேர்ப்பு 2016" என தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும். உரிய மாதிரிப் படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்படாத, விண்ணப்ப முடிவுத்திகதிக்கு பின்னர் தாமதித்து கிடைக்கப்பெறுகின்ற, குறைபாடுடைய, பூரணமற்ற விண்ணப்பங்கள் மற்றும் உரிய தகைமைகள் அற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.*

***9. கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.-*** *விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/சமாதான நீதவான்/சத்தியப் பிரமாண ஆணையாளர்/பிரசித்த நொத்தாரிசு/முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் /பொலிஸ் சேவையில் வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் ஒரு அதிகாரி/ அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் 2,30,700 ரூபா அல்லது அதற்கு கூடிய வருடாந்த சம்பளத்தைப் பெறுகின்ற பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.*

***10. பரீட்சை மற்றும் நிர்வாக செலவுகள்.-*** *பரீட்சைக் கட்டணம் மற்றும் நிர்வாக செலவு 400 ரூபா ஆகும். இந்த தொகையை* ***ஊவா மாகாண பிரதம செயலாளரின் வருமானத் தலைப்பு 20.03.02.12*** *க்கு வரவு வைத்து ஊவா மாகாணத்தின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பணம் செலுத்தி அதற்காக வழங்கப்படுகின்ற பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் ஒட்டி அனுப்புதல் வேண்டும். பற்றுச்சீட்டின் முதல் பிரதியை விண்ணப்பத்துடன் இணைத்தனுப்புதல் கட்டாயமானதாகும். எதிர்கால தேவைக்கு பற்றுச் சீட்டின் பிரதியொன்றை தங்கள் வசம் வைத்திருப்பது பயன்மிக்கதாகும். ஊவா மாகாணத்தின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பணம் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை தவிர வேறு நிறுவனங்களுக்கு பணம் செலுத்தப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுக்களோ அல்லது காசுக் கட்டளைகளோ அல்லது முத்திரைகளோ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எத்தகைய காரணத்தைக்கொண்டும் இப்பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்படமாட்டாது என்பதோடு அப்பரீட்சைக் கட்டணம் வேறு எந்தவொரு பரீட்சைக்கும் மாற்றீடு செய்துகொள்வதற்கும் இடமளிக்கப்படமாட்டாது என்பதையும் கவனத்திற்கொள்க.*

11. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியான 2016.02.15 ஆந் திகதி இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள சகல தகைமைகளையும் பூர்த்திசெய்துள்ள வெற்றிடங்களை விட அதிகமாக எண்ணிக்கையான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருப்பின் மாத்திரம் அவ்விண்ணப்பதாரர்களது சான்றிதழ்களைப் பரீட்சித்துப் பார்க்காமல் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் ஏற்புடைய பதவிக்கு தகுதிபெற்றுள்ளார் என்பதை ஏற்றுக்கொண்டதாக கருதப்படமாட்டாது.

12. திறந்த போட்டிப் பரீட்சை ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவினாலோ அல்லது இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினாலோ நடாத்தப்படும். போட்டிப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர் ஒருவர் மொத்த பரீட்சைக்கும் ஒரு மொழிமூலம் மாத்திரமே தோற்ற முடியும். விண்ணப்பத்தை சமர்ப்பித்த பின்னர் ஊடகமொழியை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

13. பரீட்சை நடைபெறும் தினத்தன்று விண்ணப்பதாரியின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பின்வரும் ஆவணங்களில் ஒன்றை பரீட்சை நிலைய அதிபருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) அட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆள் அடையாள அட்டை
(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.

மேலே உள்ள ‘அ’ மற்றும் ‘ஆ’ ஆவணங்கள் தவிர்ந்த பிற எத்தகைய ஆவணங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

14. **திறந்த போட்டிப் பரீட்சையின் பாட விதானம்**:
இந்த போட்டிப் பரீட்சை 2 வினாப் பத்திரங்களைக் கொண்டுள்ளது.

உளச்சார்பு (காலம் ஒரு 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்)
இவ்வினாப்பத்திரம் விண்ணப்பதாரரின் மொழியாற்றல், கணக்குத்திறன், தர்க்கரீதியில் சிந்திக்கும் ஆற்றல், பகுப்பாய்வு, தொகுப்பாக்கம் மற்றும் விரைவில் தீர்மானம் எடுக்கும் திறன் என்பவற்றை அளவிடக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்ட பல்தேர்வு வினாக்களும் கட்டமைக்கப்பட்ட கட்டுரைகளும் உள்ளடக்கப்பட்ட வினாப்பத்திரமாகும்.

பொது அறிவு.- (காலம் 1 1/2 மணித்தியாலம் - 100 புள்ளிகள்)

தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திலான பொருளாதார, அரசியல், சமூக ரீதியான தகவல்களை உள்ளடக்கிய வினாப்பத்திரமாகும்.
** பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

15. **பிழையான தகவல்கள் வழங்குதல்**.- இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு எவரேனுமொரு பரீட்சார்த்திக்கு தகைமை இல்லையென தெரியவரும் பட்சத்தில் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறுகின்ற போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலாயினும் அவரது பரீட்சார்த்த தகைமை இரத்துச் செய்யப்படுவதற்கு இடமுண்டு. சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பின்னராயினும் விண்ணப்பதாரர் ஒருவர் சமர்ப்பித்துள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானவை என்றோ அல்லது அறிந்துகொண்டே பொய்யான தகவல்களை சமர்ப்பித்துள்ளார் என்றோ அல்லது சரியான தகவலொன்றை வேண்டுமென்றே மறைத்துள்ளார் என்றோ தெரியவருமாயின் அவரது சேவை முன் அறிவித்தல் ஏதுமின்றி முடிவுறுத்தப்படும்.

16. இந்தப் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்தல்/ஆட்சேர்ப்பு செய்யாதிருத்தல் அல்லது நிலவும் வெற்றிடங்களில் ஒரு பகுதியை நிரப்புதல் அல்லது வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றியோ அல்லது இது பற்றிய எந்தவொரு விடயம் தொடர்பாகவும் இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியது. அவ்வாறே இவ் அறிவித்தலில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனும் விடயம் தொடர்பாக தெளிவுபடுத்தும் /தீர்மானிக்கும் உரிமை ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியது.

ஆர். எம். ரீ. பீ. ஹாதியல்தெனிய
செயலாளர்,
ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு.

ஊவா மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
இல. 14/4, பீலிபொத்தகம வீதி,
பிங்அராவை,
பதுளை,
2016, சனவரி 6.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஊவா மாகாண அரசாங்க சேவையினது இலங்கை தொழில்நுட்ப சேவையின் ........................ பதவிக்கு ஆட்சேர்ப்பு - 2016**

[ ]

அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்

A. விண்ணப்பம் கோரப்பட்டுள்ள அறிவித்தலுக்கு அமைய தாங்கள் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுக. [ ]

B. தாங்கள் உள்ளடங்குகின்ற மாவட்டத்தை குறிப்பிடுக. [ ]

C. மொழி மூலம் (சிங்களம் - 01/தமிழ் - 02/ஆங்கிலம் - 03) [ ]

1. 1.1 முதலெழுத்துக்களை இறுதியில் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் : Rev./Mr./Mrs./Miss (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----. உதா. : PERERA A. B. C.
   1.2 முழுப்பெயர் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
   1.3 முழுப்பெயர் (சிங்களத்தில் /தமிழில்) :-----.
2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-----.
   2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில் /தமிழில்) :-----.
   2.3 தொலைபேசி இலக்கம் :-----.
3. 3.1 பால்நிலை : பெண் - 1/ஆண் - 0 [ ]
   3.2 பிறந்த திகதி : வருடம் [ | | | ] மாதம் [ | ] திகதி [ | ]
   3.3 2016.02.15 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் [ | ] மாதங்கள் [ | ] நாட்கள் [ | ]
   3.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : [ | | | | | | | | | ]
4. 4.1 மாவட்டத்தில் எப்போதிலிருந்து வசிக்கின்றீர்கள்? :-----.
   4.2 வசிக்கும் பிரதேச செயலகப் பிரிவு :-----.
   4.3 வசிக்கும் கிராம அலுவலர் பிரிவு :-----.
5. கல்வித் தகைமைகள் :-
   5.1 க.பொ.த. (சாதாரண தரம்) பரீட்சை:-----.
   1. வருடம் :-----. 2. சுட்டெண் :-----.

| | பாடம் | தரம் | | பாடம் | தரம் |
|---|---|---|---|---|---|
| 1 | | | 5 | | |
| 2 | | | 6 | | |
| 3 | | | 7 | | |
| 4 | | | 8 | | |

5.2 க.பொ.த (உயர் தரம்) பரீட்சை

வருடம் :-----. சுட்டெண் :-----.

| | பாடம் | தரம் |
|---|---|---|
| 1 | | |
| 2 | | |
| 3 | | |
| 4 | | |

5.3 பெற்றுக்கொண்டுள்ள டிப்ளோமா/வேறு பாடநெறிகள் பற்றிய விபரம் :-----.

| டிப்ளோமா/பாடநெறியின் பெயர் | நிறுவனம் | காலப்பகுதி | செல்லுபடியாகும் திகதி | பாடங்கள் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |

6. வேறு தகைமைகள் :-----.

7. தாங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றமொன்றுக்கு நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? ஆம் /இல்லை
ஆம் எனில் விபரத்தை குறிப்பிடுக :-----.

8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய விபரங்கள்: -

8.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய பிரதேச செயலகம் :-----.

8.2 பற்றுச்சீட்டு இலக்கமும் செலுத்திய திகதியும் :-----.

8.3 செலுத்திய தொகை :-----.

| |
|---|
| பற்றுச்சீட்டை கழன்றுவிடாதவாறு இங்கே ஒட்டவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனளிக்கக்கூடியது.) |

9. **விண்ணப்பதாரியின் உறுதியுரை : -**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானதும் உண்மையானதுமென உறுதிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்திசெய்யப்படாமையினாலும் மற்றும் அல்லது சரியாகப் பூர்த்திசெய்யாமையினாலும் மற்றும் அல்லது பிழையாகப் பூர்த்திசெய்திருப்பதனால் ஏற்படும் நட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கு இணங்குகிறேன். மேலும் இதில் எல்லாப் பகுதிகளையும் முழுமையாகப் பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானதென நிரூபிக்கப்பட்டால் நியமிக்கப்படுவதற்கு முன் தகுதியற்றவனாவேன் என்பதையும் நியமிக்கப்பட்டதன் பின் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் எனவும் நான் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

10. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:-**

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ...................................................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் என் முன்னிலையில் ............................. ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்
(பதவி முத்திரை பதிக்கப்படல் வேண்டும்)

உறுதிப்படுத்தும் அலுவலரின் பெயர் :-----.
பதவி :-----.
முகவரி :-----.
திகதி :-----.

11. **திணைக்கள அல்லது நிறுவனத் தலைவரின் உறுதியுரை : -**

(தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மட்டும்)

மேற்படி தகவல்களைக் கொண்ட திரு./திருமதி/செல்வி ................................................................................................ அமைச்சில்/ திணைக்களத்தில் /அலுவலகத்தில் ........................... ஆந் திகதி முதல் ............................ ஆந் திகதி வரை ................. பதவியில் பணியாற்றி வருகிறார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன். அவர் 2016.02.15 ஆந் திகதிக்கு உடன் முன்னரான ............ வருட காலத்தினுள் (எச்சரிக்கை தவிர்ந்த) எவ்வித ஒழுக்காற்று தண்டனைக்கும் உட்படவில்லை என்றும், உரிய தினத்தில் சம்பள ஏற்றங்களை உழைத்துள்ளார் என்றும், திருப்திகரமான சேவைக்காலத்தை உடைய நிரந்தர ஊழியர் என்றும் அவர் இப்பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / விடுவிக்க முடியாது என்பதையும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன். (தேவையற்ற சொற்களை வெட்டிவிடவும்) உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்

திணைக்களத் தலைவரின் முழுப் பெயர்:-----.
பதவி :-----.
முகவரி :-----.
(பதவி முத்திரையைப் பதிக்கவும்)
திகதி :-----.

1-839/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.